**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாள் புதன்கிழமை**

**இ.ம.எண். 2/2025**

**இன்**

**அ.வ.எண்.194/2023**

K. தங்கவேல் --- மனுதாரர்/வாதி

/எதிர்/

N. ஹரிஸ் --- எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 02.04.2025 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. ஜெயராமன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் R. இளையபாரதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதிலுரையினை ஏற்றுக்கொண்டு வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 8 ரூல் 9 (A) மற்றும் பிரிவு 151-ன்படி மனுதாரரால் இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர் மீது கடனுறுதிச்சீட்டின்பேரில் வழக்கு தாக்கல் செய்து, எதிர்வாதவுரை தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவேண்டி நிலுவையில் உள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர் கூடுதல் எதிர்வாதவுரை தாக்கல் செய்ய மனு செய்து அம்மனு கடந்த 10.01.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி கூடுதல் எதிர்வாதவுரையை ஏற்றுக்கொண்டுள்ளதால், மனுதாரருக்கு மேற்படி எதிர்உரைக்கு பதிலுரை தாக்கல் செய்ய அனுமதியளிக்கவேண்டும்.

**<u>3....எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனு பொய்யானது. எதிர்மனுதாரர், வாதியிடம் கடனாகப் பெற்ற தொகைக்கு வட்டி கட்டிவிட்டு வந்த வரவு புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். எவ்வித கடனுறுதிச்சீட்டும் எழுதிக்கொடுக்கவில்லை. வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட கடனுறுதிச்சீட்டை நிரூபிக்கும்பொருட்டு வாதி எவ்வித முயற்சியும் எடுக்காமல் பிராதில் கூறியுள்ள சங்கதிகளை மீண்டும் பதிலுரையில் கூறி இடைமனுவை தாக்கல் செய்து வீண் காலதாமதம் செய்கிறார். எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>6. தீர்வு:-</u>**

6.1. மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரரரால் கூடுதல் எதிர்வாதவுரை தாக்கல் செய்ய மனு செய்து, அம்மனு கடந்த 10.01.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளதால், மனுதாரர் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதிக்கவேண்டுமென்றும் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் உற்பத்தி செய்யப்பட்ட கடனுறுதிச்சீட்டினை நிரூபிக்கும்பொருட்டு வாதி எவ்வித முயற்சியும் எடுக்காமல் பிராதில் கூறியுள்ள சங்கதிகளை மீண்டும் பதிலுரையில் கூறி இடைமனுவை தாக்கல் செய்து வீண் காலதாமதம் செய்கிறார் என்றும் தெரிவித்து ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

6.2. மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக அசல் வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரால் கூடுதல் எதிர்வாதவுரை தாக்கல் செய்ய அனுமதக்கப்பட்டுள்ளதால், பதிலுரை தாக்கல் செய்ய அனுமதிக்கவேண்டுமென்று வாதிடப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு அவர் தரப்பு வாதத்தைத் தாக்கல் செய்ய ஒரு வாய்ப்பு வழங்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

7. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.04.30 18:36:00 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.04.30 18:36:08 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.